# மாநிலம் மற்றும் பிராந்திய வருகை தொடர்பான விதிமுறைகள்

## கண்ணோட்டம்

நீங்கள் கடைப்பிடிக்க வேண்டிய வகையில் அவுஸ்திரேலியாவில் உள்ள ஒவ்வொரு மாநிலத்திற்கும் பிராந்தியத்திற்கும் அவற்றிற்கென சொந்த நுழைவு ஏற்பாடுகளும் விதிமுறைகளும் உள்ளன. **ஒவ்வொரு மாநிலத்திலும் பிராந்தியத்திலும் உள்ள விதிமுறைகள் மாறுபடும், குறுகிய கால அறிவிப்பில் இவை மாறுபடலாம்.**

நீங்கள் பயணம் செய்ய திட்டமிடும் மாநிலங்கள் மற்றும் பிராந்தியங்களுக்குள் உங்களால் நுழைய முடியுமா என்பதை நீங்கள் சரிபார்த்துக் கொள்ள வேண்டும். சில மாநிலங்கள் மற்றும் பிராந்தியங்கள் சர்வதேச பயணிகளுக்கென மேலதிக விலக்குகளை விதித்திருக்கலாம்.

நீங்கள் நுழைவதற்கான அனுமதி மறுக்கப்படலாம் அல்லது நீங்கள் தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கலாம். உங்களுக்குப் பொருந்தக்கூடிய பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்குவதற்கு நீங்களே பொறுப்பாவீர்கள். அவ்வாறு நீங்கள் இணங்கவில்லை என்றால், நீங்கள் கடுமையான தண்டனைகளைச் சந்திக்க நேரிடும், இதில் சிறைத்தண்டனை, குறிப்பிடத்தக்க அபராதங்கள் ஆகியனவும் அடங்கும்.

குறிப்பாக, பின்வருபவை தொடர்பாக, ஏதேனும் மாநிலத்தில் உள்ள அல்லது பிராந்தியத்தில் உள்ள விதிமுறைகள் குறித்து நீங்கள் கவனம் செலுத்த வேண்டும்:

- எல்லைக்குள் நுழைவதற்கான பதிவுப் படிவங்கள்
- தனிமைப்படுத்துதல்
- நீங்கள் நுழைந்தப்பிறகு உள்ள பரிசோதனைத் தேவைகள்
- உள்நாட்டு தடுப்பூசி விதிமுறைகள்.

மாநிலங்கள் மற்றும் பிராந்தியங்களுக்கான பல நுழைவு அல்லது பதிவுப் படிவங்களை நீங்கள் பூர்த்தி செய்ய வேண்டியிருக்கலாம்.

## பிள்ளைகள்

12 வயதுக்குட்பட்ட பிள்ளைகள், முழுமையாகத் தடுப்பூசி போட்டுக்கொண்ட வயதுவந்த குடும்ப உறுப்பினர்களுடன் பயணம் செய்யும்போது, தடுப்பூசி போட்டுக்கொண்ட பயணிகளின் அதே ஏற்பாடுகளின் கீழ் பயணிக்கலாம். 12 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் பயணம் செய்யும்போது அவர்கள் முழுமையாக தடுப்பூசி போட்டுக் கொண்டதாகக் கணக்கில் கொள்ளப்படுகிறது.

சில மாநிலங்கள் மற்றும் பிராந்தியங்கள் 12-17 வயது கொண்ட தடுப்பூசி போட்டுக்கொண்ட பிள்ளைகள் அல்லது பகுதியளவு தடுப்பூசி போட்டுக்கொண்ட பிள்ளைகள் முழுமையாகத் தடுப்பூசி போட்டுக்கொண்ட வயதுவந்தோருடன் பயணம் செய்ய அனுமதிக்கின்றன.

**தடுப்பூசி போட்டுக் கொள்ளாத வயதுவந்த குடும்ப உறுப்பினர்களுடன் பிள்ளைகள் பயணம் செய்தால், வருகைதரும் குடும்ப உறுப்பினப் பயணிகள் அனைவரும் வரம்புகளுக்கு உட்பட்டிருக்கலாம்**, மேலும் அந்த மாநில மற்றும் பிராந்தியத்தின் வருகைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். நீங்கள் உங்களைத் தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கலாம். நீங்கள் இதையும், நீங்கள் கடந்து போக்குவரத்து செய்யவிருக்கும் மற்றும் பயணிக்கவிருக்கும் மாநிலங்கள் மற்றும் பிரதேசங்கள் அனைத்துடைய வேறு ஏதேனும் விதிமுறைகளையும் சரிபார்க்க வேண்டும்.

வருகைத்தரும் பயணிகளின் வரம்புகள் பற்றிய மேலதிகத் தகவலுக்கு, உள்கட்டமைப்பு, போக்குவரத்து, பிராந்திய மேம்பாடு மற்றும் தகவல் தொடர்புத் துறை கோவிட்-19 மற்றும் பயணிகள் ஆகியவற்றைப் பார்வையிடவும்.

## எல்லைக்குள் நுழைவதற்கான பதிவுப் படிவங்கள்

சில மாநிலங்கள் மற்றும் பிராந்தியங்களில், சர்வதேச பயணிகள் வருகை தருவதற்கு முன் மேலதிகப் படிவங்கள் மற்றும் ஆவணங்களைப் பூர்த்தி செய்ய வேண்டும். இந்தத் தகவல், மாநிலங்கள் மற்றும் பிராந்தியங்களுக்கு உங்கள் வருகையைத் தயார்செய்து திட்டமிடுவதற்கு உதவுகிறது. உங்களது வருகையை அங்கீகரிக்க மாநிலங்கள் மற்றும் பிராந்தியங்களுக்கும் இது தேவைப்படலாம்.

டிஜிட்டல் முறையிலான பயணிகள் பிரகடனத்திற்கு (Digital Passenger Declaration, DPD) **கூடுதலாக** மாநில மற்றும் பிராந்தியப் பதிவுப் படிவங்களும் உள்ளன என்பதை நினைவில் கொள்ளவும். நீங்கள் அவுஸ்திரேலியாவில் நுழைந்தப் பிறகு நீங்கள் பயணிக்கும் மாநிலங்கள் அல்லது பிராந்தியங்களுக்குத் தேவையான மேலதிக நுழைவு அல்லது பதிவுப் படிவங்களையும் பூர்த்தி செய்ய வேண்டியிருக்கலாம் (உள்நாட்டுப் பயணம்).

## தனிமைப்படுத்துதல்

தனிமைப்படுத்துதல் தொடர்பான விதிமுறைகளைத் தீர்மானிப்பதும் நிர்வகிப்பதும் மாநிலங்கள் மற்றும் பிராந்தியங்களின் பொறுப்பாகும். நீங்கள் அவுஸ்திரேலியாவில்

நுழைந்த பிறகு நீங்கள் வருகைத் தரும் மாநிலம் அல்லது பிராந்தியம் மற்றும் நீங்கள் பயணிக்கும் மாநிலங்கள் மற்றும் பிராந்தியங்களில் உள்ள விதிமுறைகளுக்கு இணங்க வேண்டும் (உள்நாட்டுப் பயணம்).

உங்கள் விமானத்தை முன்பதிவு செய்வதற்கு முன், தொடர்புடைய மாநிலம் மற்றும் பிராந்திய தனிமைப்படுத்தல் விதிமுறைகள் அனைத்தையும் சரிபார்ப்பதை உறுதி செய்துகொள்ளவும்.

வெளிநாட்டில் இருந்து அவுஸ்திரேலியாவிற்கு வருகைதரும் முழுமையாக தடுப்பூசி போட்டுக் கொண்ட பயணிகள் மாற்றியமைக்கப்பட்ட அல்லது குறைக்கப்பட்ட தனிமைப்படுத்தல் ஏற்பாடுகளை அணுக முடியும். தனிமைப்படுத்துதலுக்கான விதிமுறைகள், குறுகிய கால அறிவிப்பில் மாறும்.

தடுப்பூசி போட்டுக்கொள்ளாத வயது வந்த குடும்ப உறுப்பினர்களுடன் ஒரு குழந்தை பயணம் செய்தால், அவுஸ்திரேலியாவின் மாநிலம் அல்லது பிராந்தியத்திற்கு வருகைத் தரும் குடும்ப உறுப்பினர்கள் முழுவதும் தனிமைப்படுத்தல் மற்றும் பயணிகள் வரம்புகளுக்கு உட்படுத்தப்படுவர்.

சில மாநிலங்கள் மற்றும் பிராந்தியங்களில், அவுஸ்திரேலியாவுக்குத் திரும்பும் 12 முதல் 17 வயதுக்குட்பட்ட, தடுப்பூசி போட்டுக்கொள்ளாத பிள்ளைகள் அல்லது பகுதியளவு தடுப்பூசி போட்டுக்கொண்ட பிள்ளைகள், அவுஸ்திரேலியாவுக்கு வந்த பிறகு 7 நாட்களுக்குப் பள்ளிக்குச் செல்ல முடியாது. குழந்தைப் பராமரிப்பு, முதியோர் பராமரிப்பு வசதிகள், ஊனமுற்றோர் பராமரிப்பு வசதிகள் அல்லது மருத்துவமனைகள் போன்ற பிற இடங்களுக்கும் அவர்கள் அவுஸ்திரேலியாவுக்கு வந்த 14 நாட்கள் வரை செல்ல முடியாது. அவசர மருத்துவப் பராமரிப்புக்கு விதிவிலக்குகள் பொருந்தும். மாநிலம் மற்றும் பிராந்திய தனிமைப்படுத்தல் விதிமுறைகளைச் சரிபார்க்கவும்.

## அவுஸ்திரேலியாவுக்கு வந்த பிறகு மேற்கொள்ள வேண்டிய கோவிட்-19 பரிசோதனை விதிமுறைகள்

பெரும்பாலான மாநிலங்கள் மற்றும் பிராந்தியங்களில் நீங்கள் அந்த இடத்திற்கு வந்தவுடன் கோவிட்-19 பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும்.

நீங்கள் செல்லும், போக்குவரத்து செய்யும் மற்றும் பயணம் செய்யத் திட்டமிடும் மாநிலங்கள் மற்றும் பிராந்தியங்கள் அனைத்துடைய பரிசோதனை செய்துக்கொள்வதற்கான விதிமுறைகளை நீங்கள் சரிபார்க்க வேண்டும்.

அவுஸ்திரேலியாவுக்கு உங்கள் விமானம் புறப்படுவதற்கு முன், கோவிட்-19 பரிசோதனையின் நெகட்டிவ் பரிசோதனை முடிவை வழங்குவதற்கான தேவையுடன், வருகைக்குப் பிறகு உங்கள் பரிசோதனை விதிமுறைகள் **கூடுதலாக** இருக்கும் என்பதை **கவனத்தில் கொள்ளவும்**.

## உள்நாட்டுத் தடுப்பூசி விதிமுறைகள்.

சில இடங்கள் மற்றும் சேவைகளை அணுக, சில மாநிலங்கள் மற்றும் பிராந்தியங்களின் தேவைப்படி, உங்கள் கோவிட்-19 தடுப்பூசிகள் குறித்து நீங்கள் 'நடப்பு நிலையில்' இருக்க வேண்டியுள்ளது (உதாரணமாக, உணவகங்கள், அத்தியாவசியமற்ற சில்லறை விற்பனைக் கடைகள், திரையரங்குகள், பொழுதுபோக்கு பூங்காக்கள் அல்லது திருமணங்கள் மற்றும் இறுதிச் சடங்குகளில் கலந்துகொள்வதற்கு).

அவுஸ்திரேலியாவிற்குள் நுழைவதற்கு 'முழுவதுமாக தடுப்பூசி போடப்பட்டுள்ளது' தொடர்பான விதிமுறைகளை நீங்கள் பூர்த்தி செய்தாலும், உள்நாட்டு சூழ்நிலைகளுக்கு ஏற்ப நீங்கள் 'நடப்பு நிலையில்' இல்லாதிருக்கலாம்.

அவுஸ்திரேலியாவிற்கு வருகைதரும் சர்வதேச பயணிகள், தங்கள் தடுப்பூசிகள் குறித்த நடப்பு நிலையைப் பராமரிப்பதற்காக, அவுஸ்திரேலியாவின் பூஸ்டர் தடுப்பூசித் திட்டத்தை அணுகுமாறு ஊக்குவிக்கப்படுகிறார்கள். அவுஸ்திரேலிய விசா வைத்திருப்பவர்கள் உட்பட அவுஸ்திரேலியாவில் உள்ள அனைவரும் கோவிட்-19 தடுப்பூசியை இலவசமாகப் பெறலாம்.

## அவுஸ்திரேலியாவில் மேற்கொள்ளப்படும் உள்நாட்டுப் போக்குவரத்துப் பயணம்

நீங்கள் பயணித்து செல்லும் மாநிலங்கள் மற்றும் பிராந்தியங்களுக்கான தனிமைப்படுத்துதல் விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். நீங்கள் ஹோட்டலில் தங்க வேண்டியிருக்கலாம், மேலும் உங்கள் விமானத்திற்காக நீங்கள் காத்திருக்கும் போது, நீங்கள் தங்குவதற்குக் கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும்.

## மேலதிகத் தகவல்

தனிமைப்படுத்துதல், நீங்கள் வருகை தந்தப் பிறகு மேற்கொள்ளும் கோவிட் பரிசோதனை மற்றும் உள்நாட்டு தடுப்பூசி தரநிலைகள் உள்ளிட்ட மாநில மற்றும் பிராந்திய விதிமுறைகள் பற்றிய மேலதிகத் தகவலுக்கு, தொடர்புடைய மாநில மற்றும் பிராந்திய தனிமைப்படுத்தல் விதிமுறைகளைப் பார்க்கவும்.